உ

# அபிராமியந்தாதி



## அபிராமி அம்மை தோத்திரம்

வெளியிடுவோர்:
அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## அபிராமிபட்டர் அருளிய
# அபிராமியந்தாதி

### காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்(து) உமைமைந் தனேஉல(கு) ஏழும்பெற்ற
சீரபி ராமிஅந் தாதிஎப் போதும் என் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே.

### அபிராமியந்தாதி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே 1

துணையும் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச் சிலையுமென் பாசாங் குசமுங்கையில்
அணையும் திரிபுர சுந்தரி யாவ(து) அறிந்தனமே 2

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிறிந்தேன்நின் அன்பர் பெருமைஎண் ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே 3

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரும் நீயும்என் புந்திஎந் நாளும் பொருந்துகவே 4

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர்முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்(சு)அமு தாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னிய(து) உன்பொன் திருவடித் தாமரை சிந்தையுள்ளே
மன்னிய(து) உன்திரு மந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே
முன்னிய நின்அடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய(து) என்றும்உன் றன்பர மாகம பத்ததியே 6

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே 7

சுந்தரி எந்தை துணைவிஎன் பாசத் தொடரைஎல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாள்மகி டன்தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாள்மலர்த் தாள்என் கருத்தனவே 8

கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்
பெருத்தன பால்அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயு அம் மேவந்தென் முன்நிற்கவே 9

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப(து) உன்னை
என்றும் வணங்குவ(து) உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொரு ளேஉமை யேஇமயத்(து)
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே 10

ஆனந்த மாய்என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடி(வு) உடை யாள்மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணார விந்தம் தவளநிறக்
கானந்தம் ஆடரங் காம்எம்பி ரான்முடிக் கண்ணியதே 11

கண்ணிய(து) உன்புகழ் கற்ப(து)உன் நாமம் கசிந்துபத்தி
பண்ணிய(து) உன்இரு பாதாம் புயத்தில் பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து நான்முன்செய்த
புண்ணியம் ஏ(து)என் அம் மேபுவி ஏழையும் பூத்தவளே 12

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேஎன்றும் மூவா முகுந்தற்(கு) இளையவளே
மாத்தவ ளேஉன்னை அன்றிமற் றோர்தெய்வம் வந்திப்பதே 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திப் பவர்உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப் பவர்நல் திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவர்அழி யாப்பர மானந்தர் பாரில் உன்னைச்
சந்திப் பவர்க்(கு) எளிதாம் எம்பிராட்டிநின் தண்ணளியே 14

தண்ணளிக் கென்றுமுன் னேபல கோடி தவங்கள்செய்வார்
மண்ணளிக் கும்செல்வ மோபெறு வார்மதி வானவர்தம்
விண்ணளிக் கும்செல் வமும்அழி யாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக் கும்சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே 15

கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிட மேஎண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்க ளாகி விரிந்தஅம்மே
அளியேன் அறிவள விற்(கு)அள வான(து) அதிசயமே 16

அதிசய மான வடி(வு)உடை யாள்அர விந்தமெல்லாம்
துதிசய ஆனன சுந்தர வல்லி துணைஇரதி
பதிசய மான(து) அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாகவன் றோவாம பாகத்தை வவ்வியதே 17

வவ்விய பாகத்(து) இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன்என் மேல்வரும் போது வெளிநிற்கவே 18

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே 19

உறைகின்ற நின்திருக் கோயில்நின் கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறை யின்அடி யோமுடி யோஅமுதம்
நிறைகின்ற வெண்திங்க ளோகஞ்ச மோஎன்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதி யோபூர ணாசல மங்கலையே 20

மங்கலை செங்கல சம்முலை யாள்மலை யாள்வருணச்
சங்கலை செங்கைச் சகல கலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடை யோன்புடை யாள்உடையாள்
பிங்கலை நீலிசெய் யாள்வெளி யாள்பசும் பெண்கொடியே 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்குவம் பேபழுத்த
பிடியே மறையின் பரிமள மேபனி மால்இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே
அடியேன் இறந்(து)இங்(கு) இனிப்பிற வாமல்வந்(து)
ஆண்டுகொள்ளே 22

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லா(து) அன்பர் கூட்டந்
விள்ளேன் பரசம யம்விரும் பேன்வியன் மூவுலகுக்(கு) [தன்னை
உள்ளே அனைத்தினுக் கும்புறம் பேஉள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே 23

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கழ கேஅணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே 24

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண் டேன்முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்(கு) அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின்(று) ஏத்துவனே 25

ஏத்தும் அடியவர் ஈரே ழுலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கேமணம் நாறும்நின் தாள்இணைக்(கு)என்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே 26

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை நெஞ்சத்(து) அழுக்கைஎல் லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னருள் ஏதென்று சொல்லுவதே 27

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே. 28

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே. 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றே தடுத்(து) என்னை ஆண்டுகொண் டாய்கொண்ட(து)
(அல்லவென்கை
நன்றே உனக்(கு) இனிநான்என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற் றுகைநின் திருவுளமே
ஒன்றே பலவுரு வேயரு வேஎன் உமையவளே. 30

உமையும் உமையொரு பாகனும் ஏக உருவில்வந்திங்(கு)
எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்இனி எண்ணுதற்குச்
சமயங் களுமில்லை ஈன்றெடுப் பாள்ஒரு தாயும்இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே. 31

ஆசைக்கடலில் அகப்பட்(டு) அருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லல்பட இருந் தேனைநின் பாதம்என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்(து) ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேன்ஈசர் பாகத்து நேரிழையே 32

இழைக்கும் வினைவழி யேஅடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்(து) அஞ்சல்என் பாய்அத்தர் சித்தம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே (எல்லாம்
உழைக்கும் பொழு(து)உன்னை யேஅன்னை யேஎன்பன் ஓடிவந்தே

வந்தே சரணம் புகும்அடி யாருக்கு வான்உலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும்பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே 34

திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்(கு) ஒருதவம் எய்திய வாஎண் ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்து மோதரங்கக் கடலுள்
வெங்கட் பணியணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே 35

பொருளே பொருள்முடிக் கும்போக மேஅரும் போகம்செய்யும்
மருளே மருளில் வருந்தெரு ளேஎன் மனத்துவஞ்சத்(து)
இருளேதும் இன்றி ஒளிவெளி யாகி இருக்கும்உன்றன்
அருளே(து) அறிகின்றிலேன் அம்புயா தனத்(து) அம்பிகையே 36

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே. 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளக் கொடியில் பழுத்தசெவ் வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகை யும்துணை யாஎங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின்கண் டீர்அம ராவதி ஆளுகைக்கே. 38

ஆளுகைக்(கு) உன்றன் அடித்தாமரைகள் உண்(டு); அந்தகன்பால்
மீளுகைக்(கு) உன்றன் விழியின் கடையுண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்(கு) என்குறை நின்குறை யே அன்று; முப்புரங்கள்
மாளுகைக்(கு) அம்பு தொடுத்தவில் லான்பங்கில் வாள்நுதலே.

வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுதற்(கு) எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்(கு) அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும்அன்பு
பூணுதற்(கு) எண்ணிய எண்ணம் அன்றோ?முன்செய் புண்ணி
யமே. 40

புண்ணியம் செய்தன மேமன மேபுதுப் பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடிநம் காரணத்தால்
நண்ணிஇங் கேவந்து தம்மடி யார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல்பத்ம பாதம் பதித்திடவே. 41

இடங்கொண்டு விம்மி இணைகொண்(டு) இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்(டு) இறைவர் வலிய
நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே 42

பரிபுரச் சீறடி பாசாங் குசைபஞ்ச பாணிஇன்சொல்
திரிபுர சுந்தரி சிந்துர மேனியள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்(து) இருந்தவளே. 43

தவளே இவள்எங்கள் சங்கர னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியும்ஆம்
துவளேன் இனிஒரு தெய்வமுண் டாகமெய்த் தொண்டு
செய்தே 44

தொண்டுசெய் யாதுநின் பாதம் தொழாது துணிந்திச்சையே
பண்டுசெய் தார்உள ரோஇல ரோஅப் பரிசடியேன்
கண்டுசெய் தால்அது கைதவ மோஅன்றிச் செய்தவமோ
மிண்டுசெய் தாலும் பொறுக்கைநன் றேபின் வெறுக்கையன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன் றேபுது நஞ்சையுண்டு
கறுக்கும் திருமிடற் றான்இடப் பாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான்உன்னை வாழ்த்துவனே.

வாழும் படியொன்று கண்டுகொண் டேன்மனத் தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநில
ஏழும் பருவரை எட்டும்எட் டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்திமைப் போதிருப் பார்பின்னும் எய்துவரோ?
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவிவெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப் போது வளைக்கை அமைத்(து)
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்(து) அஞ்சல்என்பாய்
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே. 49

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்
றாயகி யாதி உடையாள் சரணம் அரண்நமக்கே. 50

அரணம் பொருள்என்று அருள்ஒன் றிலாத அசுரர்தங்கள்
முரண்அன்(று) அழிய முனிந்தபெம் மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும்எய் தார்இந்த வையகத்தே 51

வையம் துரகம் மதகரி யாமகு டஞ்சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்(கு) அன்புமுன்பு
செய்யும் தவம்உடை யார்க்குள வாகிய சின்னங்களே 52

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும்முத் தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில்வைத்துத்
தன்னந் தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே. 53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்(று) இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம் பால்ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே 54

மின்னா யிரம்ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
தன்னாள் அகமகிழ் ஆனந்த வல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்கு மாய்முடி வாய முதல்விதன்னை
உன்னா(து)ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றில்லையே 55

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்(து)இவ் வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற் பாள்என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்ற வாஇப் பொருள்அறிவார்
அன்றா லிலையில் துயின்றபெம் மானும்என் ஐயனுமே. 56

ஐயன் அளந்த படியிரு நாழிகொண்(டு) அண்டம் எல்லாம்
உய்ய அறம்செயும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலை யுங்கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத் தாய்இது வோஉன்றன் மெய்யருளே 57

அருணாம் புயத்தும்என் சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல் லாள்தகை சேர்நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்
சரணாம் புயமும்அல் லாற்கண்டி லேன்ஒரு தஞ்சமுமே. 58

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேன்ஒற்றை நீள்சிலையும்
அஞ்சம்பும் இக்(கு)அலர் ஆகநின் றாய்அறி யார்எனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே 59

பாலினும் சொல்இனி யாய்பனி மாமலர்ப் பாதம்வைக்க
மாலினும் தேவர் வணங்கநின் றோன்கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின் று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும் சாலநன் றோஅடி யேன்முடை நாய்த்தலையே 60

நாயேனை யும்இங்(கு) ஒருபொரு ளாக நயந்துவந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய்நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந் தாய்என்ன பேறுபெற்றேன்
தாயே மலைமக ளேசெங்கண் மால்திருத் தங்கைச்சியே 61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்துமத
வெங்கண் கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் அலரும்எப் போதும்என் சிந்தையதே 62

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள்குன்றில் கொட்டும் தறிகுறிக் கும்சமயம்
ஆறும் தலைவிஇவளாய் இருப்ப(து) அறிந்திருந்தும்
வேறும் சமயம்உண் டென்றுகொண் டாடிய வீணருக்கே 63

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்கஅன்பு
பூணேன் உனக்(கு) அன்புபூண்டுகொண் டேன்நின் புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒருபொழு துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணேன் இருநில முந்திசை நான்கும் ககனமுமே 64

ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன்அங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுண் டாயதன் றோவல்லி நீசெய்த வல்லபமே 65

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேன்நின் மலரடிசெம்
பல்லவம் அல்லது பற்றொன்றி லேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே 66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள்தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே 67

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர்விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி யூறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவமுடை யார்படை யாத தனமில்லையே. 68

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே 69

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன்கடம் பாடவியில்
பண்களிக் கும்குரல் வீணையும் கையும் பயோதரம்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர் குலப்
பெண்களிற் றோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

அழகுக்[கு] ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள்பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழிவுற்று நின்றநெஞ் சேயிரங் கேலுனக்[கு] என்குறையே 71

என்குறை தீரநின்[று] ஏத்துகின் றேன்இனி யான்பிறக்கின்
நின்குறை யேஅன்றி யார்குறை காண்இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங் கோன்சடை மேல்வைத்த தாமரையே 72

தாமம் கடம்பு படைபஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வைரவர் ஏத்தும் பொழு(து)எமக் கென்றுவைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்[கு]ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோ டிரண்டு நயனங்களே. 73

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும்பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே 74

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில் தாயரின்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்கிவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே 75

குறித்தேன் மனத்தில்நின் கோலம்எல் லாம்நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒருகூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகு தும்பஞ்ச பாண பைரவியே 76

பைரவி பஞ்சமி பாசாங் குசபஞ்ச பாணிவஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிருங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே 77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத் தேஎன் துணைவிழிக்கே 78

விழிக்கே அருளுண்[டு] அபிராம வல்லிக்கு வேதஞ்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்(கு)அவ் வழிகிடக்கப்
பழிக்கே சுழன்றுவெம் பாவங்க ளேசெய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடென்ன கூட்டினியே 79

கூட்டிய வாஎன்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஓட்டிய வாஎன்கண் ஓடிய வாதன்னை உள்ளவண்ணம்
காட்டிய வாகண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டிய வாநடம் ஆடகத் தாமரை ஆரணங்கே 80

அணங்கே அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோ[டு]
இணங்கேன் என(து) என்றிருப் பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றி லேன்என் கண்நீவைத்த பேரளியே 81

அளியார் கமலத்தில் ஆரணங் கேஅகி லாண்டமும்நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின்எங்ங னேமறப் பேன்நின் விரகினையே 82

விரவும் புதுமலர் இட்டுநின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல் லார்இமை யோர்எவரும்
பரவும் பதமும் அயிரா வதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே 83

உடையாளை ஒல்கு செம்பட்டு உடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடை யாளைத் தயங்குநுண்ணூல்
இடையாளை எங்கள்பெம் மானிடை யாளைஇங்(கு) என்னைஇனிப்
படையாளை உங்களை யும்படை யாவண்ணம் பார்த்திருமே 84

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும் பனிச்சிறைவண்(டு)
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும் சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து மாலையுமே 85

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு கதித்தகப்பு
வேலைவெங் காலன்என் மேல்விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பனிமொழியே 86

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திரு மூர்த்திஎன்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்விழி யால்மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படியொரு பாகங்கொண் டாளும் பராபரையே 87

பரமென்று உனையடைந் தேன்தமி யேனும்உன் பக்தருக்குள்
தரமன்று இவன்என்று தள்ளத் தகாது தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில்அயன்
சிரம்ஒன்று செற்றகை யாள்இடப் பாகம் சிறந்தவளே 88

சிறக்கும் கமலத் திருவேநின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின் துணைவரும் நீயும் துரியம்அற்ற
உறக்கம் தரவந்(து) உடம்போடு உயிர்உற வற்றறிவு
மறக்கும் பொழுதென்முன் னேவரல் வேண்டும் வருந்தியுமே 89

வருந்தா வகைஎன் மனத்தா மரையினில் வந்துபுகுந்[து]
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனிஎனக்குப்
பொருந்தா தொருபொருள் இல்லைவிண் மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தா னதைநல்கும் மெல்லியளே 90

மெல்லிய நுண்ணிடை மின்அனை யாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப்பு கழ்ந்துமறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பக(டு) ஊரும் பதம்தருமே 91

பதத்தே உருகிநின் பாதத்தி லேமனம் பற்றிஉன்றன்
இதத்தே ஒழுக அடிமைகொண் டாய்இனி யான்ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்அவர் போனவழியும் செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே 92

நகையே இஃதிந்த ஞாலமெல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த
வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே 93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பித் தொழும்அடி யார்விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்த மாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடு மாறிமுன் சொன்னஎல்லாம்
தரும்பித்தர் ஆவரென் றால்அபி ராமி சமயம்நன்றே 94

நன்றே வருகினும் தீதே விளைகினும் நான்அறிவ(து)
ஒன்றேயு மில்லை உனக்கே பரம்எனக்(கு) உள்ளஎல்லாம்
அன்றே உனதென்[று] அளித்துவிட் டேன்அழி யாதகுணக்
குன்றே அருட்கட லேஇம வான்பெற்ற கோமளமே 95

கோமள வல்லியை அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலக லாமயில் தன்னைத்தம்மால்
ஆமள வும்தொழு வார்எழு பாருக்கும் ஆதிபரே 96

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே 97

தைவந்து நின்னடித் தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின்அல் லால்ஒரு காலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகஅறி யாமடப் பூங்குயிலே 98

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடைக் கோலஇயல்
மயிலாய் இருக்கும் இமயா சலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீதன்னமாம்
கயிலா யருக்[கு] அன்[று] இமவான் அளித்த கனங்குழையே 99

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளும் கரும்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில்எப் போதும்
உதிக்கின்றனவே 100

## நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எலாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவிஅடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்[கு] ஒருதீங்கில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தேவி துணை

# திருக்கடவூர்
# அபிராமி அம்மைப் பதிகம்

## காப்பு

தாயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதன்றால்
வரையைங் கரன்றாள் வழுத்துவாம் — நேயர்நிதம்
எண்ணும் புகழ்கடவூர் எங்கள்அபி ராமவல்லி
நண்ணும்பொற் பாதத்தில் நன்கு.

## நூல்

### ஆசிரிய விருத்தம்

கங்கையொடு தும்பையும் அணிந்தவர் விளக்குங்
கலர்மதியை நிகர்வதனமுங்
கருணைபொழி விழிகளும் விண்முகில்கள் வெளிறெனக்
காட்டிய கருங்கூந்தலுஞ்
சங்கையில் லாதொளிரு மாங்கல்ய தாரணந்
தங்குமணி மிடறு மிக்க
சதுர்பெருகு துங்கபா சாங்குசம் இலங்குகர
திலமுவிர லணியும் அரவும்
புங்கவர்க் கமுதருளு மந்தரகு சங்களும்
பொலியுநவ மணி நூபுரம்
பூண்டசெஞ் சேவடியை நாளும் புகழ்ந்துமே
போற்றியென வாழ்த்தவிடை மேல்
மங்கள மிருந்தநின் பதியுடன் வந்தருள்செய்
வளர்திருக் கடவூரில் வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமிசிவ சாமிமகிழ்
வாமி அபிராமி! உமையே!

சந்திர சடாதரி முகுந்தசோ தரி! துங்க
சலசலோ சனமா தவி!
சம்ப்ரம பயோதரி! சுமங்கலி! சுலட்சணி
சாற்றருங் கருணா கரி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி! வராகி! சாம்பவி! அமரசோதரி
அமலை! செக சால சூத்ரி!
அகிலாத்ம காரணி! விநோதசய நாரணி!
அசண்டசின் மய பூரணி
சுந்தரி! நிதந்தரி! துரந்தரி வரை ராசா
சுகுமாரி! கௌமாரி! உத்
துங்கல் யாணி! புஷ் பாஸ்திராம் புயபாணி
தொண்டர்கட் கருள் சர் வாணி!
அந்தரி! மலர்ப்பிரம ராதிதுதி வேதவொலி
வளர் திருக்கடவூ ரில் வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமி மகிழ்
வாமி அபிராமி உமையே.

வாசமலர் மருவளக பாரமும் தண்கிரண
மதிமுகமும் கயல்விழி களும்
வள்ளநிகர் முலையுமான் நடையு நகை மொழிகளும்
வளமுடன் கண்டு மின்னார்
பாசபந் தத்திடை மனங்கலங் கித்தினம்
பலவழியும் எண்ணி யெண்ணிப்
பழிபாவம் இன்னதென் றறியாமல் மாயப்ர
பஞ்சவாழ் வுண்மை யென்றே
ஆசைமே லிட்டுவீ ணாசநாய் போல்திரிந்(து)
அலைவதல் லாமல் உன்றன்
அம்புயப் போதெனுஞ் செப்பதந் துதியாத
அசடன்மேற் கருணை வருமோ?
மாசிலா தோங்கிய குணாகரி பவானிசீர்
வளர்ந்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுபநேமி புகழ்நாமி! சிவசாமி மகிழ்
வாமி! அபிராமி! உமையே!

நன்றென்று தீதென்று நவிலுவிவ் விரண்டினுள்
நவின்றதே உலகினுள் ளோர்
நாடுவார் ஆதலில் நானுமே அவ்விதம்
நாடினேன் நாடி லொழும்
இன்றென்று சொல்லாமல் நினதுதிரு வுள்ள(மது)
திரங்கியருள் செய்கு வாயேல்
ஏழையேன் உய்குவேன் மெய்யான மொழியிஃதுன்
இதயமறி யாத துண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றமெல்லாம் உறைந்(து) தென்றும்மன் பார்க்கருள்
    குமாரதே வனைய ளித்த
குமரி! மரகதவருணி! விமலி! பைரவி கருணை
    குலவுகிரி ராச புத்ரி!
மன்றல்மிகு நந்தன வனங்கள் சிறை அளிமுரல
    வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமி! மகிழ்
    வாமி! அபிராமி! உமையே!

ஒருநாள் இரண்டுநாள் அல்லநான் உலகத்து
    உதித்தஇந் நாள்வ ரைக்கும்
ஒழியாத கவலையால் தீராத இன்னல் கொண்(டு)
    உள்ளந் தளர்ந்து மிகவும்
அருநாண் இயற்றிட்ட விற்போல் இருக்குமிவ்
    வடிமைபாற் கருணை கூர்ந்து
அஞ்சேலெ னச்சொலலி ஆதரிப் பவர்கள்உனை
    யன்றியிலை உண்மை யாக
இருநாழி கைப்போதும் வேண்டாது நிமிடத்தில்
    இவ்வகில புவனத் தையும்
இயற்றியரு ளுந்திறங் கொண்டநீ ஏழையேன்
    இன்னல்தீர்த் தருளல் அரிதோ?
வருநாவ லூரர்முத லோர்பரவும் இனியபுகழ்
    வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமி மகிழ்
    வாமி! அபிராமி! உமையே!

எண்ணிக்கை இல்லாத துன்பங்கள் மேன்மேல்
    ஏறிட் டொறுக்க அந்தோ
எவ்விதம் உளஞ்சகித் துய்குவேன் இப்பொழுது
    எடுத்திட்ட சன்மம் இதனில்
நண்ணியெவ் அளவுசுக மானதொரு நாளினும்
    நான் அனு பவித்த தில்லை
நாடெலாம் அறியுமிது கேட்பதேன் நின்னுளமும்
    நன்றாய் அறிந்தி ருக்கும்
புண்ணியம் பூர்வசன னத்தினிற் செய்யாத
    புலைய னானாலும் நினது
பூரண கடாட்சவீட் சண்ணியஞ் செய்தெனது
    புன்மையை அகற்றி அருள்வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணவர்கள் விண்ணவர்கள் நித்தமும் பரவுமிசை
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி; சிவசாமி மகிழ்
வாமி? அபிராமி! உன்னையே

தெரிந்தோ அல்லாதுதெரி யாமலோ இவ்வடிமை
செய்திட்ட பிழையி ருந்தால்
சினங்கொண்ட தோர்கணக் காகவை யாதுநின்
திருவுளம் இரங்கி மிகவும்
பரிந்துவத் தினியேனும் பாழ்வினையில் ஆழ்ந்(து) இனத்
படாதுநல் வரமஅ ழித்துப்
பாதுகாத் தருள்செய்ய வேண்டும்அண் டரண்டவுயிர்
பரிவுடன் அளித்த முதல்வி
புரந்தான் போதன்மா தவனாதி யோர்கள்துதி
புரியும்ப தாம்பு யமலர்ப்
புங்கவி! புராந்தரி! புரந்தகி! புராதனி
புராணி திரி புவனே ஸ்வரி
மருந்தினும் நயந்தசொற் பைங்கிளிவ ராகி!எழில்
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி!சுபநேமி!புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
வாமி!அபி ராமி!உமையே!

வஞ்சகக் கொடியோர்கள் நட்புவேண் டாமலும்
மருந்தினுக் காவேண் டினும்
மறந்துமோர் பொய்ம்மொழி சொல்லாமலும் தீமையாம்
வழியினிற் செல்லா மலும்
விஞ்சுநெஞ் சதனிற் பொறுமைதரி யாமலும்
வீண்வம்பு புரியா மலும்
மிக்கபெரி யோர்கள்சொலும் வார்த்தைதள் ளாமலும்
வெகுளியவை கொள்ளா மலும்
தஞ்சமென நின(து) உபய கஞ்சந்து தித்திடத்
தமியேனுக் கருள்பு ரிந்து
சர்வகா லமுமெனைக் காத்தருள் வேண்டினேன்
சலக்கயல்கள் விழியை அனைய
வஞ்சியர்செவ் வாய்நிகரு வாவியாம் பன்மலரும்
வளர்திருக் கடவூ ரில் வாழ்
வாமி சுப நேமி! புகழ்!நாமி சிவசாமி மகிழ்
வாமி! அபி ராமி! உமையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனதின்னல் இன்னபடி யென்றுவே றொருவர்க்(கு)
இசைந்திடவும் அவர்கள் கேட்(டு) இவ்
வின்னல்தீர்த் துள்ளத்(து)இரங்கிநன் மைகள் செய்யவும்
வள்ளளவு முடியாது நின்
உனதமரு வுஞ்சடைக் கண்ணருள் சிறிதுசெயின்
உதவாத நுண்மணல் களும்
ஓங்குமாற் றுயர்சொர்ண மலையாகும் அதுவன்றி
உயர்கில புவனங் களைக்
கனமுடன் அழித்துமுப் பத்திரண் டறங்களும்
கவின்பெறச் செய்யு நின்னைக்
கருதுநல் லடியவர்க் கெளிவந்து சடுதியிற்
காத்துரட் சித்த தோர்ந்து
வனசநிகர் நின்பாதம் நம்பினேன்! வந்தருள் செய்
வளர்திருக் கடவூரில் வாழ்!
வாமி! சுபநேமி புகழ்நாமி சிவ சாமி மகிழ்
வாமி! அபி ராமி! உமையே!

கருநீல வடிவமார் மாடேறி உக்தண்ட
கனதண்ட வெம்பா சமுங்
கைக்கொண்டு சண்டமா காலன்முன் எதிர்க்கமார்க்
கண்டன் வெகுண்டு நோக்க
இருநீல கண்டனெனும் நின்பதியை உள்ளத்தில்
இன்புகொண் டருச்சனைசெய
ஈசனவ் விலிங்கம் பிளப்பநின் னோடுதோன்றி
யமனைச்சூ லத்தி லூன்றிப்
பெருநீல மலையென நிலத்தில்அன் னவன்விழப்
பிறங்குதா ளால்உ தைத்துப்
பேசுமுனி மைந்தனுக் கருள்செய்த துனதரிய
பேரருளின் வண்ண மனமோ?
வருநீல மடமாதர் விழியென்ன மலர்வாவி
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ் நாமி! சிவ சாமி மகிழ்
வாமி! அபி ராமி? உமையே!

சகலசெல் வங்களும் தரும் இமய கிரிராச
தனயைமா தேவி நின்னைச்
சத்யமாய் நித்தியமுள்ள த்தில்து திக்குமுத்
தமருக்(கு) இரங்கி மிகவும்
அகிலமதில் நோயின்மை கல்விதன தானியம்
அழகுபுகழ் பெருமை இளமை
அறிவுசந் தானம்வலி துணிவுவாழ் நாள்வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகுநல் லூழ்நு கர்ச்சி
தொகை தரும் பதினாறு பேறும்தந் தருளிநீ
சுகானந்த வாழ்வளிப் பாய்
சுகிர்தகுண சாலி! பரிபாலி! அநுகூலி! திரி
சூலி!மங் களவி சாலி
மகவுநான்!நீதாய் அளிக்கொணாதோ? மகிமை
வளர்திருக் கடவூ ரில்வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமி மகிழ்
வாமி அபிராமி உமையே

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்:
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே

காரளக பந்தியும் பந்தியின் அலங்கலும்
கரிய புருவச் சிலைகளும்
கர்ணகுண் டலமுமதி முகமண்டலம் நுதற்
கஸ்தூரி யிட்ட பொட்டும்
கூரணிந் திடுவிழியும் அமுதமொழியுஞ் சிறிய
கொவ்வையின் கனிய தரமும்
குமிழனைய நாசியுங் குந்தநிகர் தந்தமும்
கோடுசோ டான களமும்
வாரணிந் திருமாந்த வனமுலையும் மேகலையும்
மணிநூ புரப்பா தமும்
வந்தெனது முன்னின்று மந்தகாசமுமாக
வல்வினையை மாற்று வாயே
ஆரமணி வானிலுறை தாரகைகள் போல நிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே

மகரவார் குழல்மேல் அடர்ந்து குமிழ் மீதினில்
மறைந்து வாளைத் துறந்து
மைக்கயலை வேண்டிநின் செங்கமல விழியருள்
வரம்பெற்ற பேர்க ளல்றோ?
செகமுழுதும் ஒன்றைந் தனிக் டை கவித்துமேற்
சிங்கா தனத்தி லுற்றுச்
செங்கோலும் மனுநீதி முறைமையும் பெற்றமிகு
திகிரியுல காண்டு பின்பு
புகர்முகத் (து) ஐரா வதப்பாக ராகிநிறை
புத்தேளிர் வந்து போற்றிப்
போகாதே வேந்திரன் எனப்புகழ விண்ணில்
புலோமிசை யொடுஞ்சு கிப்பர்;
அகரமுத லாகிவளர் ஆனந்த ரூபியே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

மதிகடல்கள் ஏழையுந் திகிரியிரு நான்கையும்
மாதிரக் கரியெட் டையும்
மாநாகம் ஆனதையும் மாமேரு என்பதையும்
மாகூர்மம் ஆனதையும் மாமேரு என்பதையும்
பொறியரவு தாங்கிவரு புவனமீ ரேழையும்
புத்தேழிர் கூட்டத்தையும்
பூங்களை யுந்திகிரி மாயவனையும் அரையிற்
புலியாடை உடையா னையும்
முறை முறைக ளாயீன்ற முதியவர்களாய்ப் பழைமை
முறைகள் தெரியாத நின்னை
மூவுலகி லுள்ளவர்கள் வாலையென் றறியாமல்
மொழிகின்ற தேது சொல்வாய்
அறிவு நிறை விழியியர்தம் ஆனந்த வாரியே
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமி யே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடாமல் உயிரெனும் பயிர்தழைத் தோங்கிவர
அருள்மழை பொழிந்தும் இன்ப
வாரிதியி லேநின்ன தன்பெனுஞ் சிறகால்
வருந்தா மலேய ணைத்துக்
கோடாமல் வளர்சிற் றெறும்புமுதல் குஞ்சரக்
கூட்டமுத லான சீவ
கோடிகள் தமக்குப் புசிக்கும் புசிப்பினைக்
குறையாம லேகொ டுத்து
நீடாழி யுலகங்கள் யாவையும் நேயமாய்
நின்னுதர பந்தி பூக்கும்
நின்மலீ! அகிலங் களுக்(கு) அன்னை என்றோதும்
நீலியென் று) ஓதுவாரோ?
ஆடாத நான்மறையின் வேள்வியால் ஓங்குபுகழ்
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி:
அருள்வாமி! அபிராமி யே!

பல்குஞ் சரந்தொட் டெறும்புகடை யானதொரு
பல்லுயிர்க் குங்குல் விடைப்
பட்டதே ரைக்கும்அன் றுந்பவித் திடுகருப்
பையுறு சீவ னுக்கும்
மல்குஞ் சராசரப் பொருளுக்கும் இமையாத
வானவர் குழாத்தி னுக்கும்
மற்றுமொரு மூவர்க்கு மியாவர்க்கு மவரவர்
மனச்சலிப் பில்லா மலே
நல்குந் தொழிற்பெருமை உண்டா யிருந்துமிகு
நவநிதி உலக்கி ருந்தும்
நானொருவன் வறுமையிற் சிறியனா னால்அந்
நகைப்புனக் கேஅல் லவோ?
அல்கலந் துய்பர்நா டளவெடுக் குஞ்சோலை
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமி யே!

நீடுல கங்களுக்(கு) ஆதார வாய்நின்று
நித்தமாய் முத்தி வடிவாய்
நியமமுடன் முப்பத் திரண்டறம் வளர்க்கின்ற
நீமனை வியாய்இ ருந்தும்
வீடு வீடுக் டோறும் ஓடிப் புகுந்துகால்
வேசற்(று) இலட்சை யும்போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்டுகில் அரைக்கணிய விதியற்று நிர்வாண
வேடமுங்கொண்டு கைக்கோர்
ஓடேந்தி நாடெங்கும் உள்ளந் தளர்ந்துநின்(று)
உன்மத்த னாகி அம்மா!
உன்கணவன் எங்கெங்கும் ஐயம்புகுந் தேங்கி
உழல்கின்ற தேது சொல்வாய்;
ஆடுகொடு மாடமிசை மாதர்விளை யாடிவரும்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

ஞானந் தழைத்துன் சொருபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தி னிற்பாய்
நடுவினி லிருந்துவந் தடிமையும் பூண்டவர்
நவிற்றுமஉப தேச முட்கொண்
டீனந்த னைத்தள்ளி எனதுநா னெனுமானம்
இல்லாம லேது ரத்தி
இந்திரிய வாயில்களை இறுகப்பு தைத்துநெஞ்(சு)
இருளற விளக்கேற் றியே
ஆனந்த மானவிழி அன்னமே! உன்னைஎன்
அகத்தா மரைப்போ திலே
வைத்துவே றேகவலை யற்றுமே லுற்றபர
வசமாகி அழியாத தோர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்ற தென்றுகாண்
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒ( பாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

சலதியுல கத்திற் சராசரங் களையீன்ற
தாயா கினாலெ னக்குத்
தாயல்ல வோ யான்உன் மைந்த னன்றோஎனது
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன் முகத்தைஉன்
முந்தானை யால்து டைத்து
மொழிகின்ற மழலைக் குகந்துகொண் டிளநிலா
முறுவல்இன் புற்றகு கில்யஎன்
குலவிளை யாடல்கொண் டருண்மழை பொழிந்து அங்கை
கொட்டி வாயவென்(று) அழைத்துக்
குஞ்சரமு கன்கந்த னுக்குஇளையன் என்றெனைக்
கூறினா ஈனம் உண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலைகடலி லேதொன்று மாறாத அமுதமே
ஆதிகட ஷூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபா ணி!
அருள்வா மி! அபிராமி யே

கைப்போது கொண்டுன் பதப்போது தன்னிலே
கணப்போதும் அர்ச்சிக் கிலேன்;
கண்போதி னாலுன் முகப்போது தன்னையான்
கண்டுதரி சனைபுரி கிலேன்:
முப்போதில் ஒருபோதும் என்மனப் போதிலே
முன்னிஉன் ஆல யத்தின
முன்போது வார்தமது பின்போத நினைகிலேன்
மோசமே போய்உ ழன்றேன்
மைப் போத கத்திற்கு நிகரெனப் போதொரு
மைக்கடா மீதேறியே
மாகோர காலன் வரும்போது தமியேன்
மனங்கலங் கித்தி யங்கும்
அப்போது வந்துன அருட்போது தந்தருள்
ஆதிகட ஷூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமி யே!

மிகையுந் துரத்தவெம் பிணியுந் துரத்த
வெகுளி யானதுந் துரத்த
மிடியுந் துரத்தநரை திரையுந் துரத்தமிகு
வேதனை களுந்து ரத்த
பகையுந் துரத்தவஞ் சனையுந் துரத்த
பசியென் பதுந்து ரத்த
பாவந் துரத்தபதி மோகந் துரத்த
பலகா ரியமுந் துரத்த
நகையுந் துரத்தஊழ் வினையுந் துரத்த
நாளுந் துரத்த வெகுவாய்
நாவரண் டோடிகால் தளர்ந்திடும் என்னை
நமனுந் துரத்து வானோ?
அகிலஉல கங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதிகட ஷூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி! அபிராமி யே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமுத மொழிகள்

நான் உங்களிடமிருந்து கேட்பதெல்லாம் ஒரே ஒரு பரிசைத் தான். பவித்ரமான இதயத்தை விட உயர்ந்தது வேறென்ன இருக்க முடியும்? நான் உங்களிடம் கொடுத்து வைத்துள்ள, அந்த தூய இதயத்தை, அன்பெனும் அமிழ்தம் ததும்பும் இதயத்தை மீண்டும் என்னிடமே திருப்பித் தாருங்கள்.

அகங்காரம் ஒழிய, எல்லாப்பொருட்களும் கடவுளைச் சேர்ந்தவை என்ற எண்ணத்தை வலுவாக்கிக் கொள்! அதுதான் உண்மையுங் கூட

நல்லவரெல்லாம் மகிழட்டும்! தீயவரும், பொய் சொல்பவரும் கோழைகளும் கொடூர மனம் கொண்டோரும் கூட மகிழட்டும்! என்னுடைய கருணை அவர்களைப் புனிதமான பாதைக்குத் திருப்பி விடும்! பாவம் செய்பவர்க்கும், பழியினால் வீழ்ந்தவருக்கும், என் கதவுகள் மூடப்படுமானால், அவர்கள் எங்கே போவார்கள்?

—பாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஷ்டலக்ஷ்மி

## கலண்டர்

- புதுப் பொலிவு! விலை மலிவு
- துல்லியமான கணிப்பு
- கண்கவர் படங்கள்
- சிறந்த தயாரிப்புகள்

**கேட்டு வாங்குங்கள்**

தயாரிப்பாளர்கள் :
சிவா பிறின்டேர்ஸ், கைதடி (இலங்கை)

ரூபா: 20/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org